**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 12/2020**

**Prosecution Witness 3 (LW 4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. பாண்டியம்மாள் | ஜாதி | : | -- |
| கணவர் பெயர் | : | சுரேஷ் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.04.2024.

( எதிரிகள் ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை:

1) நான் தற்சமயம் கம்போஸ்ட் ஓடை தெரு , அல்லிநகரத்தில் குடியிருக்கிறேன். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்து போன சுதாலட்சுமி, சென்ராயன், அபிநயா, லோகமணி , என்னுடைய மாமியார் பொன்னுத்தாய் ஆகியோர்களை எனக்கு முன்பே தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 04.03.2019 ந் தேதி காலை 06.00 மணியளவில் எங்களது வீட்டில் இருந்து சர்தார் ஓட்டிய ஆட்டோவில் எனது கணவர் சுரேஷ், நான், என் மகள் திவ்யா ஆகியோர்கள் மேற்படி ஆட்டோவில் குலதெய்வம் அய்யனார் கோவில் நல்லதேவன்பட்டிக்கு சென்றோம்.

2) மற்றொரு ஆட்டோவை 2 வது எதிரி ராமு என்பவர் அதே மாதிரி புறப்பட்டு வர அதில் முருகன், பொன்னுத்தாய் , சுதாலட்சுமி, சென்ராயன், அபிநயா, லோகமணி ஆகியோர்கள் வந்தார்கள். அவர்களும் சாமி கும்பிட தான் வந்தார்கள். சுமார் 10 முதல் 15 நிமிடங்களில் பிராதுகாரன்பட்டி விலக்கில் டீ குடித்து விட்டு என்னுடைய மாமனார் முருகன் எங்கள் ஆட்டோவில் ஏறி மீண்டும் அனைவரும் கோவிலுக்கு புறப்பட்டோம். ஆண்டிபட்டி பஸ் ஸ்டாண்ட்டை

தாண்டி மதுரை ரோட்டில் சென்று கொண்டு இருந்தோம்.

3) எங்களுக்கு முன்பு 2 வது எதிரி ராமு ஓட்டிய ஆட்டோ சென்றது. 20 மீட்டர் துாரத்தில் சென்று கொண்டு இருந்தது. அவ்வாறே நாங்கள் சென்று கொண்டு இருந்தோம். அப்போது மதுரை ரோட்டில் அமைந்துள்ள கொண்டமநாயக்கன்பட்டியில் உள்ள ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் சென்று கொண்டு இருந்தோம். நாங்கள் சாலையின் இடது புறம் சென்று கொண்டு இருந்தோம். அப்போது எங்கள் ஆட்டோக்களுக்கு முன்பு ஒரு அரசு பேருந்து வேகமாக வந்தது. அப்போது அரசு பேருந்து நடுகோட்டை மீறி வரும் போது 2 வது எதிரி ராமு ஓட்டிய ஆட்டோ மீது மோதியது.

4) அப்போது எனக்கு பதட்டமாக இருந்தது. 2 வது எதிரி ராமு சென்ற ஆட்டோ தலைகுப்புற கவிழந்தது. பேருந்து நடுகோட்டின் மீது நின்றது. எங்கள் ஆட்டோவை ஓரமாக நிப்பாட்டி அனைவரும் சென்று பார்த்தோம். அனைவரும் இரத்த வெள்ளத்தில் ஆட்டோவில் கிடந்தார்கள். ஆம்புலன்ஸ் வந்தது. இரண்டு ஆம்புலன்ஸில் அனைவரையும் ஏற்றபட்டு க.விலக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அது சம்பந்தமாக எனது மாமனார் முருகன் ஆண்டிபட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

5) நாங்கள் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். எனது மாமியார் பொன்னுத்தாய் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். அடிபட்ட அனைவரையும் சம்பவ இடத்திலும், மருத்துவமனையிலும் பார்த்தேன். அனைவரும் சம்பவம் நடந்த 12 மணி நேரத்திற்குள் இறந்து விட்டார்கள். அன்றைய தினமே இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1 வது எ.த.கு.வி:**

| | |
|---|---|
| கேள்வி | உங்களுக்கு திருமணம் நடந்து எத்தனை வருடம் ஆகிவிட்டது ? |
| பதில் | 13 வருடங்கள். |
| கேள்வி | ஒவ்வொரு வருடமும் மகாசிவராத்திரி அன்று உங்களுடைய குலதெய்வம் கோவிலுக்கு போவது உண்டு என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அல்லிநகரத்திற்கும், குலதெய்வம் அய்யனார் கோவிலுக்கும் இடையே எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் ? |
| பதில் | ஞாபகமில்லை |

| | |
|---|---|
| | .3. |
| கேள்வி | நீங்கள் வருடம், வருடம் உங்கள் குலதெய்வத்திற்கு செல்வதால் தேனி முதல் மதுரை ரோட்டில் எங்கு , எங்கு வளைவு உள்ளது என்பது பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் ? |
| பதில் | தெரியும். உசிலம்பட்டி வரை தெரியும். |
| கேள்வி | கொண்டமநாயக்கன்பட்டி தாண்டி தான் தேசிய நெடுஞ்சாலையில் காவல் தடுப்பு உள்ளது என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | ஆண்டிபட்டி பஸ் ஸ்டாண்டில் இருந்து மதுரை செல்லும் ரோடு என்பது எஸ் வடிவில் வளைந்து செல்லும் என்றால் ? |
| பதில் | ஒரு இடத்தில் அப்படி தான் செல்கிறது. |
| கேள்வி | சம்பவ நடந்ததாக சொல்லும் தேதியில் மகாசிவராத்திரி என்பதால் தேனியில் இருந்து அவர் அவர் குலதெய்வ கோவிலுக்கு செல்வதால் நிறைய வாகனங்கள் சென்று கொண்டு இருந்தது என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | ஆண்கள் மேல்நிலைப்பள்ளி எதிர்புறம் தான் மைதானம் உள்ளது என்றால் ? |
| பதில் | சரிதான் |
| .கேள்வி | பொதுவாக அந்த மைதானத்தில் காலையில் நடைபயிற்சிக்காக நிறைய நபர்கள் சென்று வருவார்கள் என்றால் ? |
| பதில் | நான் கவனிக்கவில்லை. |
| கேள்வி | ராமு ஓட்டிய சென்ற ஆட்டோவில் உங்கள் அண்ணன் சென்ராயன் டிரைவர் சீட்டுக்கு அருகில் அமர்ந்து இருந்தார் என்றால் ? |
| பதில் | பின் சீட்டில் தான் அமர்ந்து இருந்தார். |
| கேள்வி | ராமு சென்ற ஆட்டோவில் கோவிலுக்கு சென்று பொங்கல் வைப்பதற்காக பொங்கல் பானை , விறகு வைத்து இருந்தீர்கள் என்றால் ? |
| பதில் | இல்லை. எங்கள் ஆட்டோவில் தான் இருந்தது. |
| கேள்வி | நீங்கள் சென்ற சர்தார் ஆட்டோவின் நம்பர் சொல்ல முடியுமா என்றால் ? |
| பதில் | ஞாபகமில்லை. |
| கேள்வி | நீங்கள் அந்த மாதிரி ஆட்டோவில் போகவில்லை அதனால் உங்களால் அந்த ஆட்டோவின் நம்பரை சொல்ல முடியவில்லை என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | போலீசார் உங்களை எங்கு வைத்து என்று விசாரித்தார்கள் என்றால் ? |
| பதில் | அன்று காலை விசாரித்தார்கள். |

| | |
|---|---|
| | .4. |
| கேள்வி | நீங்கள் சென்ற ஆட்டோவில் யார் , யார் எங்கு உட்காரந்து இருந்தீர்கள் என்றால் ? |
| பதில் | நாங்கள் நால்வரும் பின் இருக்கையில் உட்கார்ந்து இருந்தோம். |
| கேள்வி | நீங்கள் நால்வரும் மேற்படி வாகனத்தில் பின் சீட்டில் உட்கார்ந்து இருந்ததால் எதிர்புறம் இருந்து வந்த வாகனங்களை பார்க்க முடியாது என்று சொன்னால் ? |
| பதில் | பார்த்தோம். |
| கேள்வி | நீங்கள் அந்த மாதிரி பார்க்கவில்லை என்றாலும் ,இந்த வழக்கிற்காக பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | வழக்கில் 1 வது எதிரியை எங்கு வைத்து பார்த்தீர்கள் என்றால் ? |
| பதில் | சம்பவத்திற்கு பிறகு பார்த்தேன். |
| கேள்வி | சம்பவ விபத்தில் அடிபட்ட நபர்களுக்கு எங்கு , எங்கு காயங்கள் இருந்தது பற்றி போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் ? |
| பதில் | ஆம். |
| கேள்வி | பிராது காரன்பட்டி விலக்கில் வைத்து டீ குடித்தாக சொல்லும் சங்கதியை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் ? |
| பதில் | ஆம். |
| கேள்வி | சம்பவத்தின் போது ராமுவின் ஆட்டோவிற்கு ஏற்பட்ட சேதத்தையும், அரசு பேருந்திற்கு ஏற்பட்ட சேதத்தையும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் ? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | நீங்கள் சம்பவத்தை பார்க்கவில்லை என்பதால் மேற்படி சேதங்களை சொல்லவில்லை என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | சம்பவம் நடந்தது ரோட்டின் மையப்பகுதி என்றால் ? |
| பதில் | ஆம். |
| கேள்வி | சம்பவம் நடந்த பிறகு , ராமுவின் ஆட்டோ ரோட்டின் எந்த பகுதியில் கிடந்தது என்றால் ? |
| பதில் | வடக்கு பக்கம். |
| கேள்வி | சம்பவ ரோடு வளைவாக இருந்ததால் 1 வது எதிரி அவரது வாகனத்தை முறையான சாலை விதிகளை பின்பற்றி மெதுவாக ஓட்டி வந்தார் என்றால் ? |
| பதில் | சரியல்ல. |

| | |
|---|---|
| | .5. |
| கேள்வி | நீங்கள் இருப்பது தேனி மாவட்டம், மற்றும் உங்கள் குலதெய்வம் இருக்கும் ஊர் மதுரை மாவட்டம் என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | பொதுவாக ஒரு ஆட்டோவில் 3 நபர்களுக்கு மேல் பயணிக்க கூடாது என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | ஒரு ஆட்டோவை பொதுவாக உரிமை வரம்பு எல்கைக்குள் தான் இயக்க வேண்டும் என்றால் ? |
| பதில் | தெரியாது. |
| கேள்வி | நீங்கள் சாலை விதிகளை மீறி ஆட்டோவில் ஏறி சென்றதால் தான் விபத்து நடந்தது என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | நீங்கள் விபத்தில் இறந்தது உங்கள் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | விபத்தில் இறந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கேட்டு எதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ? |
| பதில் | ஆமாம். |
| கேள்வி | 1 வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| 2 வது எ.த.கு. வி | |
| கேள்வி | போலீசார் விசாரணையில் ஆட்டோவின் பதிவு எண் ஞாபகமில்லை என்று சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | ஆட்டோ எண் என்னிடம் கேட்கவில்லை. அதனால் நான் சொல்லவில்லை. |
| கேள்வி | போலீசார் கேட்டு இருந்தால் என்ன சொல்லியிருப்பீர்கள் என்றால் ? |
| பதில் | பதட்டத்தில் தெரியவில்லை., அல்லது ஞாபகமில்லை என சொல்லியிருப்பேன். |
| கேள்வி | பிராதுகாரன்பட்டி விலக்கில் சம்பவ நேரத்தில் டீ கடை ஏதும் இல்லை என்று சொன்னால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | போலீசார் விசாரணையில் க.விலக்கு பகுதியில் டீ குடித்ததாக சொன்னீர்களா என்றால் ? |
| பதில் | இல்லை. |

| | |
|---|---|
| | .6. |
| கேள்வி | இரண்டு ஆட்டோவும் பிராதுகாரன்பட்டி விலக்கில் உள்ள பெட்ரோல் வங்கயில் பெட்ரோல் போட்டார்கள் என்றால் ? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | விபத்து சம்பவத்தை ஒரு போலீசார் ஒரு செல்போன் மூலம் தகவல் சொன்னார் என்றால் ? |
| பதில் | இல்லை. நேரடியாக நான் பார்த்தேன். |
| கேள்வி | சம்பவ இடத்தில் இருந்து க.விலக்கு மருத்துவமனைக்கு சுரேஷ், நாகராஜ் , முருகன் ஆகிய 3 பேரும் க.விலக்கு மருத்துவமனைக்கு சென்றதாக சொல்கிறார்கள் என்றால் ? |
| பதில் | நாங்கள் சென்ற ஆட்டோவில் முருகனும், சுரேஷ் ம் சென்றார்கள். |
| கேள்வி | மேற்படி இருவரும் புறப்படும் போது என்ன நேரம் இருக்கும் ? |
| பதில் | சுமார் 10 நிமிடங்களுக்குள் இருக்கும். |
| கேள்வி | அவர்கள் பின் நீங்களும் சென்றீர்களா என்றால் ? |
| பதில் | அதே ஆட்டோவில் சென்றேன். |
| கேள்வி | மருத்துவமனைக்கு எவ்வளவு நேரத்தில் போய் சென்றீர்கள் என்றால் ? |
| பதில் | 07.45 மணி இருக்கும். |
| கேள்வி | நாகராஜ் எத்தனை மணிக்கு வந்தார் என்றால் ? |
| பதில் | என் மாமியார் மருத்துவமனையில் வந்து இருந்ததால் அவருடன் இருந்தேன். நாகராஜ் வந்த நேரம் தெரியாது. |
| கேள்வி | முருகனும், சுரேஷ்ம் 07.45 மணிக்கு வந்த பிறகு எவ்வளவு நேரம் அங்கு இருந்தார்கள் என்றால் ? |
| பதில் | மாலை 05.00 மணி வரை இருந்தார்கள். |
| கேள்வி | பிராதுகாரன்பட்டி விலக்கில் இருந்து நீங்கள் புறப்படுவதற்கு 15 நிமிடத்திற்கு முன்பே ராமு ஆட்டோ சென்று விட்டது என்று சொன்னால் ? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | விபத்து நடந்த பிறகு அங்கு கூட்டமாக இருந்தது என்றாலும், அதை கடந்து தான் உங்கள் ஆட்டோ சென்றது என்றாலும் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | ஆம்புலன்ஸ் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தது. ? |
| பதில் | பத்து நிமிடத்தில். |
| கேள்வி | நீங்கள் சம்பவ இடத்திற்கு செல்லும் போது ராமுவும் அடிபட்டு கீழே கிடந்தார் என்றால் ? |

| | |
|---|---|
| பதில் | சரிதான். |
| கேள்வி | அவரை நீங்கள் தான் ஆம்புலன்ஸில் ஏற்றி விட்டீர்கள் என்றால் ? |
| பதில் | சரிதான். |

மறு விசாரணை இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 01.04.2024 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2024.04.01 17:17:28 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
01.04.2024.